செய்தி வெளியீடு எண்: 514 நாள்:19.08.2019

செய்தி வெளியீடு

# தமிழ்நாடு முன்னாள் படைவீரர்கள் கழக தின விழாவில் முன்னாள் படைவீரர்கள் குடும்பதைச் சேர்ந்த 4 நபர்களுக்கு தலா ரூ.3 லட்சம் வீதம் ரூ.12 இலட்சம் விபத்துக் காப்பீட்டுத்திட்டத்தின் கீழ் நிதி உதவியும், பல்வேறு விளையாட்டு போட்டிகளில் வெற்றி பெற்றவர்களுக்கு சான்றிதழ்களும் மாண்புமிகு கூட்டுறவுத்துறை அமைச்சர் திரு.செல்லூர் கே.ராஜு அவர்கள் வழங்கினார்.

இன்று (19.08.2019) தமிழ்நாடு முன்னாள் படைவீரர்கள் கழக தின விழா, இராணுவ நிறுவன மையத்தில் நடைபெற்றது. முன்னாள் படைவீரர்கள் குடும்பதைச் சேர்ந்த 4 நபர்களுக்கு தலா ரூ.3 லட்சம் வீதம் ரூ.12 இலட்சம் விபத்துக் காப்பீட்டுத்திட்டத்தின் கீழ் நிதி உதவியும், டெக்ஸ்கோ தின விழாவையொட்டி நடைபெற்ற விளையாட்டுப் போட்டிகளில் வெற்றி பெற்றவர்களுக்கு பாராட்டுச் சான்றிதழ்களையும் வழங்கி மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பேசியதாவது.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களது சீரிய திட்டங்களால், முன்னாள் படைவீரர்களின் மறுவாழ்வில், அக்கறையுடனும், முனைப்புடனும் செயல்படுவதில், தமிழ்நாடு, இந்தியாவிலேயே முன்னோடி மாநிலமாக விளங்குகிறது. முன்னாள் படைவீரர்களின் ஒட்டுமொத்த பொருளாதார மேம்பாட்டினை கருத்தில்கொண்டு, முன்னாள் படை வீரர்களுக்கு வேலைவாய்ப்பு மூலம் மறுவாழ்வு அளித்து அவர்களுடைய வருவாயை உயர்த்தி வாழ்வாதாரத்தை மேம்படுத்தும் பொருட்டு, தமிழ்நாடு முன்னாள் படைவீரர்கள் கழகம் 28.01.1986 அன்று ஆரம்பிக்கப்பட்டது.

தங்களது குடும்பத்தினரை பிரிந்து, மகிழ்ச்சியை துறந்து இந்திய தாய் திருநாட்டின் குடிமக்களை அன்னிய தேசத்தினரிடமிருந்தும், தீவிரவாதிகளிடமிருந்தும் காக்கும் பொருட்டு, தங்கள் இன்னுயிரை துச்சமென மதிக்கும் முப்படையினரின் நலனில் பெரும் அக்கறை கொண்டு, அவர்களின் வாழ்வு செழிக்கும் வகையில் பல அறிய திட்டங்களை தீட்டி செயல்படுத்தியவர் **மாண்புமிகு அம்மா** அவர்கள்.

அவ்வகையில், முப்படைப்பணியில், தமிழ்நாட்டைச் சேர்ந்த படைவீரர்களின் வீர தீரச் செயல்கள், மற்றும் சிறப்பாக பணிபுரிந்தமைக்காக வழங்கப்படும் விருதுகளுக்கான தொகைகள், மாண்புமிகு அம்மா அவர்களின் ஆட்சியில் 2 முறை உயர்த்தி வழங்கப்பட்டு வருகிறது.

பரம் வீர்ச் சக்ரா விருதுக்கான தொகை ரூ. 15.00 இலட்சத்திலிருந்து ரூ. 25.00 இலட்சமாகவும், அசோக் சக்ரா விருதுக்கான தொகை ரூ.12.00 இலட்சத்திலிருந்து ரூ.20.00 இலட்சமாகவும், மகாவீர்ச் சக்ரா விருதுக்கான தொகை ரூ.10.00 இலட்சத்திலிருந்து ரூ.15.00 இலட்சமாகவும், கீர்த்தி சக்ரா விருதுக்கான தொகை ரூ.8.00 இலட்சத்திலிருந்து ரூ.12.00 இலட்சமாகவும், வீர்ச் சக்ரா விருதுக்கான தொகை ரூ.7.5 இலட்சத்திலிருந்து ரூ.10.00 இலட்சமாகவும், சௌரியச் சக்ரா விருதுக்கான தொகை ரூ.5.00 இலட்சத்திலிருந்து ரூ.8.00 இலட்சமாகவும் உயர்த்தி வழங்கியவர் மாண்புமிகு அம்மா அவர்கள்.

அதேபோல, 2ஆம் உலகப் போரில் பணிபுரிந்த முன்னாள் படை வீரர்களுக்கான ஆயுட்கால மாதாந்திர நிதி உதவியை ரூ.6000 இருந்து ரூ.10,000 ஆகவும், விதவைகளுக்கு வழங்கப்படும் மாதாந்திர நிதி உதவியை ரூ. 3000 இருந்து ரூ.4,000 ஆகவும் உயர்த்தி வழங்கப்பட்டு வருகிறது.

கடந்த 8 ஆண்டுகளில் தமிழ்நாடு முன்னாள் படைவீரர்கள் கழகத்தின் மூலம் மத்திய, மாநில அரசு மற்றும் அரசு சார்ந்த நிறுவனங்களில் 4,105 முன்னாள் படை வீரர்கள் ஒப்பந்த அடிப்படையில் பணியமர்த்தம் செய்யப்பட்டுள்ளனர்.

மாண்புமிகு அம்மா அவர்கள் மின் திருட்டை தடுக்கும் வகையில், மின் திருட்டை தடுக்கும் படை ஒன்றை புதிதாக உருவாக்கி, மின்சார நுணுக்கம் அறிந்த 215 முன்னாள் படைவீரர்களை நியமித்தார். இதன் மூலம் 16.5.2011 முதல் 30.06.2019 வரை ரூ.182.37 கோடிக்கு மின் திருட்டு தடுக்கப்பட்டு அரசுக்கு வருவாய் ஈட்டப்பட்டுள்ளது.

டெக்ஸ்கோவின் அனைத்து ஒப்பந்த பணியாளர்களுக்கும் **ரூ.3 இலட்சம்** வரை இழப்பீடு பெறும் வகையில் விபத்து காப்பீடு திட்டத்தை செயல்படுத்தி வருகிறது. கடந்த 8 ஆண்டுகளில் 42 குடும்பங்கள் ரூ.126 இலட்சம் அளவிற்கு பயன்பெற்றுள்ளனர்.

டெக்ஸ்கோவால் சிபாரிசு செய்யப்படும் அனைத்து பணியாளர்களுக்கும் கணினி பயிற்சி, ஓட்டுநர் பயிற்சி, கைபேசி பழுதுபார்த்தல், தீயணைப்பு மற்றும் மீட்புப்பணி உள்ளிட்ட செயல்திறன் மேம்பாட்டு பயிற்சி வழங்கப்படுகிறது. கடந்த 8 ஆண்டுகளில் 3,686 முன்னாள் படைவீரர்களுக்கு, ரூ.69.09 இலட்சம் செலவில் செயல்திறன் மேம்பாட்டு பயிற்சி வழங்கப்பட்டுள்ளது.

டெஸ்க்கோ மூலம் தற்போது பணியாற்றி வரும் 5,175 பணியாளர்களுக்கு குறைந்தபட்ச ஊதியத்தினை 17.05.2012 ஆம் தேதி முதல் 10 விழுக்காடு உயர்த்தி வழங்கப்பட்டுள்ளது.

இயற்கை மரணம் அடையும் பணியாளர்களுக்கு ரூ.5000 வீதம் ஈமச்சடங்கு நிதி உதவி வழங்கப்பட்டு வருகிறது. முன்னாள் படைவீரர் நலக் கழகத்தின் மூலம் கடந்த 8 ஆண்டுகளில் பல்வேறு சேவைகளின் மூலம் ரூ.1,661.02 கோடி வருவாய் ஈட்டப்பட்டுள்ளது, நிகர இலாபமாக மட்டும் ரூ.119.41 கோடி ஈட்டப்பட்டுள்ளது என்றார்.

இந்நிகழ்ச்சியில், பொதுத்துறை முதன்மைச் செயலாளர் டாக்டர் பி. செந்தில்குமார்,இ.ஆ.ப., சிறப்புச் செயலாளர் / டெக்ஸ்கோ மேலாண்மை இயக்குநர் திருமதி மைதிலி கே.ராஜேந்திரன், இ.ஆ.ப., டெக்ஸ்கோ இயக்குநர்கள், கர்னல் வி.ஸ்ரீனிவாசன், கேப்டன் கே.வி.மகாதேவன், விங் கமாண்டர் கே. ராமகிருஷ்ணன், திரு. சி.ஆர்.பாலாஜி, பேராசிரியர் வெங்கட பாலசுப்பிரமணியம், மேஜர் வி.எஸ்.ஜெயக்குமார், கர்னல் பிரேம்குமார், முனைவர் அருண்குமார், டெக்ஸ்கோ பொது மேலாளர் திருமதி பி.சாரதா, ஆகியோர் கலந்துகொண்டனர்.

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**